
# சமூக விஞ்ஞானம்

## காலாண்டு ஆய்விதழ்

மலர் - 10 இதழ் - 38 சனவரி-பிப்ரவரி-மார்ச்-2013



**உரையாளருக்கு அப்பால் பண்டைய பாடல்களைப் பொருள் காணலும் புரிந்து கொள்ளலும்**

மே.து. ராசுகுமார்

• ப. மருதநாயகம் • ந. முத்துமோகன் • சி. மகேசுவரன் • சண்முகராஜா சிறிகாந்தன்
ஜெ. ஜேன் டி'அல்மெய்டா • பி. மரிய ஜெனிபர் தயா • க. இளங்கோ • சி. இராசாராம் • ரா. வசந்தா

# வீடு குடிபுகுதல் : சடங்கியல்சார் மானிடவியல் பகுப்பாய்வு

சண்முகராஜா சிறிகாந்தன்

சடங்குகள் மனிதவாழ்வியலில் பிரிக்க முடியாத அம்சமாகத் தொடர்கின்றன. உலகப் பண்பாடுகளின் அனைத்துச் சமூகங்களின் செயற்பாட்டுக்கும் அச்சமூகங்களின் அங்கத்தவர்களின் இயங்குநிலை பற்றிய புரிதலுக்கும் சடங்குகள் பற்றிய பகுப்பாய்வு துணையாகின்றது. ஒவ்வொரு சடங்கிற்கும் தனித்துவமான பண்புகளும் செயல்களும் காரண-காரியங்களும் உள்ளன. இவை பற்றிய அறிவுபூர்வமான பகுப்பாய்வின்போது குறித்த சடங்குகளும் அவற்றினை ஆற்றுகின்ற சமூகங்களுக்கும் இடையிலான உறவும் அச்சமூகம் சார்ந்த ஏனைய விடயங்களும் தெளிவாக்கப்படுகின்றன. இத்தகைய ஒரு பின்னணியிலேயே மானிடவியலில் சடங்குகள் பற்றிய ஆர்வமும் அவை சார்ந்த ஆய்வுகளும் முக்கியத்துவம் பெறுகின்றன.

சடங்குகளை அவற்றின் தன்மை ரீதியாக வகைப்படுத்தி மானிடவியல் ஆராய்கின்றது. பொதுவாக மானிடவியலாளர்கள் சடங்குகள் அனைத்தினையும் சமயம் சார்ந்த சடங்குகள், சமூகம் சார்ந்த சடங்குகள் என்று வகைப்படுத்தியுள்ளனர். இவை தவிர பல்வேறுபட்ட வகைப்பாடுகளைச் சடங்குகளின் தன்மை, நோக்கம், செயன்முறை ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்திக் கொள்ளலாம். இந்நிலையில் சடங்குகள் பற்றி ஆராய்ந்த ரோனால் கிம்ஸ் நிலைப்படுத்தும் சடங்குகள், நிலைமாற்றும் சடங்குகள் எனும் வகைப்பாட்டினுள் சடங்குகள் அனைத்தினையும் பகுப்பாய்வு செய்துள்ளர். இவ்விரண்டு சடங்கியல் வகைப்பாட்டின் வழியேயான பகுப்பாய்வானது குறித்த சமூகத்தின் அமைப்பினையும், அதன் இயங்கியல் விசையினையும் புரிந்துகொள்வதற்குத் துணைபுரிகின்றது.

இந்த வகையிலேயே எங்கள் பண்பாட்டுப் புலங்களில் தனித்துவமாய் விளங்குகின்ற 'புதுமனைபுகுதல்' தொடர்பான சமூக நடைமுறைகள், சடங்குகள், அவற்றின் வழியே வெளிப்படும் சமூக அசைவியக்கள் பற்றிய ஒரு நுண்நிலை நோக்கு வேண்டியுள்ளது.

## 2

எல்லா மனிதர்களின் வாழ்விலும் அத்தியாவசியமான தேவைகளில் ஒன்று பாதுகாப்பான உறைவிடம். இதனை வீடு, வாழ்விடம், குடில், மனை, இல்லம் என வேறுபட்ட முறைகளில் குறிப்பிடலாம். கிராமத்து வழக்கில் வீட்டின் அவசியத்தினை வலியுறுத்தும் வகையில் நிலவும் பழமொழி ஒன்று 'எலி வளை ஆனாலும் தனி வளை வேண்டும்' என ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் வீடு தேவையான ஒன்றாக விளக்கப்படுகின்றது. பொதுவாக வீட்டினை ஒவ்வொரு சமூகத்தவரும் தத்தமது சமய பண்பாட்டு நம்பிக்கைக்கேற்பவும் பொருளாதார வசதிக்கேற்பவும் அமைத்துக் கொள்கின்றனர்.

மனிதர்கள் தாம் வாழும் வீடு பற்றிப் பண்பாட்டிற்குப் பண்பாடு பல்வேறு கருத்துக்களைக் கொண்டுள்ளனர். வீடு பண்பாட்டின் பொருள்சார், பொருள் சாராப் பண்பாட்டுக் கூறுகளின் குவிமையமாக விளங்குகின்றது. அதாவது, வீட்டின் அமைப்பும் தோற்றப்பாடும் குறித்த பண்பாட்டின் பொருள்சார் பண்பாட்டுக் கூறினை வெளிப்படுத்திவிடும். எடுத்துக்காட்டாக, மலைவாழ் மக்களின் வீடும் கடற்கரையோர மக்களின் வீடும் அமைப்பு ரீதியாகவும் பயன்படுத்தப்படும் பொருள் ரீதியாகவும் வேறுபடும். எனினும், இன்றைய நவீனத்துவ சமூகச் சூழலில் இவ்வேறுபாட்டின் எல்லைகள் நலிவடைந்து போகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும், வீடு தொடர்பான பண்பாட்டின் பொருள் சாராக் கூறுகள் மிகவும் வலிமையுடன் காணப்படுகின்றன. அதாவது, வீட்டினுடைய தலைவாசல் எந்தத் திசை நோக்கி வைக்கப்படுதல்

வேண்டும் என்ற நியமங்கள் தொடக்கம், சாமியறை (படஅறை), சமையல் அறை, அடுப்பின் வாய், கிணறு, மலசலக்கூடம் போன்ற வீட்டின் பொருள்சார் அமை விடக் கூறுகள் அனைத்தினையும் குறித்த சமூகத்தின் சமயம் சார்ந்த சமூகப் பண் பாட்டு நம்பிக்கை கட்டமைக்கின்றது. இவை பண்பாட்டுக்குப் பண்பாடு தனித் துவமானதாகவுள்ளன.

சில பறவைகளும் விலங்குகளும் குறிப் பாக தங்களுடைய இனப்பெருக்கக் காலங் களில் வாழ்வதற்கேற்ற வகையில் சில அமை விடங்களை அமைக்கின்றன. இவை கூடு (காகம், குருவி, அணில்), பொந்து (கிளி, மைனா, மரங்கொத்தி) குழி (முயல், முதலை) என அழைக்கப்படுகின்றன. ஆனால், மனிதர்களிடையே இது ஒரு பண்பாட்டு விடயமாக நோக்கப்படுகின் றது. மேலும், வாழ்வுக் காலத்திற்கான ஓர் அங்கீகாரமாக, அர்த்தம் நிறைந்ததாக உள்ளது. எனவே, வீடு என்பது மனிதனை மையமாகக் கொண்டிருக்கின்றது என்பது புலப்படுகின்றது. இன்னும் சிலர் வீட்டினை மனித உடலுக்கு ஒப்பிட்டுக் கூறுவர். வீடு கட்டுத,பெண் தன்னுடைய குழந்தைப் பேற்றுக்காகக் கருத்தரித்தலுடன் ஒப்பிட்டு நோக்கப்படுகிறது. அதாவது, வீட்டுக்கான நிலம் தெரிதல் தொடக்கம் வீட்டினைக் கட்டுதல் வரை பல்வேறு படிநிலைச் செயல்பாடுகள்/சடங்குகள் முதன்மை பெறுகின்றன.

இந்த வகையில் யாழ்ப்பாணச் சமூகத் தில் நிலவும் ஒரு மரபுத் தொடர் 'வீட்டி னைக் கட்டிப் பார், கலியாணத்தைச் செய்து பார்' எனக் குறிப்பிடுகின்றது. ஏனெனில், இவ்விரண்டு விடயங்களும் மிகவும் கடின மான ஒன்று; பல்வேறு செயற்பாடுகள் இணைந்த ஒன்று.

மனித உடலுக்கு ஆன்மா உள்ளது போன்றே வீட்டுக்கும் ஆன்மா உண்டு என நம்புகின்றனர். இவ் ஆன்மாவினை நிலைப் படுத்தும் ஒன்றாகவே வீடுபுகுதல் சடங் கினைச் செய்கின்றனர். அன்றாட வாழ்வில் சிலரின் 'இந்த வீடு எனக்குப் பொருத்த மில்லை', 'இந்த வீடு எனக்கு நல்லது' என்ற அங்கலாய்ப்புக்கள் நம் கவனத்தில் கொள்ளத்தக்கன. அதே நேரம் தங்க ளுடைய சமூக வாழ்விலிருந்து பிரித்துப் பார்க்க முடியாத ஓர் அங்கமாகவும் வீடு நோக்கப்படுகின்றது. குறிப்பாக 'என் வீடு', 'எனது பரம்பரை வீடு' என்று வீட்டிற் கான உடைமைப்படுத்தல் தனியே பொருள், சொத்து என்னும் கருத்து நிலைக்கு அப்பாற்பட்டு நோக்கப்பட வேண்டியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இன்றும் 1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து இன்னமும் தங்கள் சொந்தக் கிராமங்களுக்கு மீள்குடியமர்த் தப்படாது மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் சிலர் தற்போது தாங்கள் வாழும் பகுதிகளில் தங்களுக்கென்று சொந்தமாக வீட்டினைக்கூட வாங்கினா லும் தங்கள் சொந்த கிராமத்து வீடு தங்களுக்கு வேண்டும் என்று போராட்டம் கூடச் செய்கின்றனர். இப்போராட்டங்கள் இலங்கைக்குள் மட்டுமன்றி இலங்கைக்கு வெளியேயும் நடைபெறுகின்றன. குறிப் பாக, போராட்டக் காலத்தில் வெளிநாடு களில் அகதிகளாக வாழும் தமிழ் மக்க ளால் இவை மேற்கொள்ளப்படுகின்றன. புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலும் வாழும் மக்கள் அண்மையில் இலங்கை இராணு வம் தங்களுடைய காணிகளைச் சுவீகரிப்ப தற்கு எதிராக அமைதிப் பேரணிகளை நடத்தி, தங்களுடைய வீட்டின் உரிமைத் தன்மையினை வெளிப்படுத்தியுள்ளனர். மேலும், இவர்களில் சிலர் நீதிமன்ற உதவியினையும் நாடியுள்ளமையும் கவனத் திற்குரியது.

இது ஒருபுறம் இருக்கும்போது, வயது முதிர்ந்தவர்களுடைய ஆசை தனித்துவமா னது; வித்தியாசமானதும்கூட. அவர்களது இறுதிக் காலத்திலாவது அவர்தம் வீட்டில் வாழவேண்டும், உடலானது தம்முடைய வீட்டு வேலியில் வளர்ந்த பூவரசு மர விறகினால் எரிக்கப்பட வேண்டும் என்ற ஆதங்கமும் உணர்திறனும் நிலவிடக் காணலாம். இதுவும்கூட ஈழத்தமிழர் பண்பாட்டில் வீட்டின் சமூக, பண்பாட்டு உணர்திறனை வெளிப்படுத்தி நிற்கின்றது.

இவற்றினைவிட மிகவும் மனதை நெருடச் செய்த கலந்துரையாடல் ஒன்றை இங்குப் பதிவு செய்யலாம். இலங்கையில் யுத்தம் 2009ஆம் ஆண்டு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதாக இலங்கை அரசாங்கம் அறிவித்தது. இதனைத் தொடர்ந்து இடம்பெயர்ந்து வாழும் மக்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பவும் மீள்குடியமரத் தொடங்கினார்கள்;. அவர்களில் சிலர் இன்னும் தங்கள் சொந்த கிராமங்களுக்குப் போவதற்கு அனுமதிக்கப்படவில்லை. அவ்வாறு மீள்குடியமருவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட குடும்பங்களுடனான சந்திப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது ஒரு தந்தை 'தம்பி எங்களை எங்கள் ஊருக்குப் போக ஏதாவது செய்யுங்கோ' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண் டார். சொந்த வீட்டுக்குப் போகுதலிலிருந்த அவரது மிகப் பெரும் ஆர்வத்திற்குக் காரணம் யாழ்ப்பாணத்தில் நிலவி வரும் 'சீதன' நடைமுறையாகும்.

யாழ்ப்பாணச் சமூகத்தில் சீதனம் என்பது ஒரு சமூகப் பிரச்சினையாகவுள்ளது. அதே நேரம், இதனை யாழ்ப்பாணப் பண்பாட்டுத் தனித்துவம் என்றும் சொல்லலாம். யாழ்ப்பாணத்தில் திருமணத்திற்குப் பின்னரான மணமக்கள் வாழ்விடம் என்பது தென்னிந்தியாவில் நிலவுவது போல் இல்லாது மணமகள் வீட்டிலேயே ஆகும். இதனை யாழ்ப்பாணத்துத் தேச வழமை சீதனம் என்னும் எண்ணக்கருவின் அடிப்படையில் விளக்குகின்றது. ஒரு பெண்ணுக்குச் சீதனமாகக் கொடுக்கப்பட்ட வீடு அவளுடைய மகளுக்கே உரித்தானது. சில வேளைகளில் பெண் குழந்தை இல்லாவிடில் தன்னுடைய ஆண் மகனுக்குக் கொடுக்க முடியும். பெண்ணுக்குக் கொடுக்கப்படும் சீதனத்தில் முதலிடம் பெறுவது 'வீடு வளவு' ஆகும்.

அண்மையில் ஒரு திருமணம் ஒழுங்கு செய்யும் நிறுவனத்திற்கு ஆய்வின் நிமிர்த்தம் போயிருந்தபோது அங்கே மணமகள், மணமகன் விபரக் கோப்புக்கள் தனித்தனியாகச் சீரமைக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தன. அவற்றுள் மணமகள் தொடர்பான கோப்பினிலுள்ள அதிகமான குடும்பங்கள் தங்களுடைய மகளுக்கு 'வீடு' சீதனமாகக் கொடுக்க விருப்பம் தெரிவித்திருந்தார்கள். அதே நேரம் மணமகன் தொடர்பான கோப்பினுள் 'வீடு எதிர் பார்க்கப்படுகின்றது' என்ற குறிப்புக் காணப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த தந்தையுடைய, மீண்டும் தனது சொந்தக் கிராமத்துக்குப் போதலின் பின்னுள்ள ஆசையும் தனது மகளுக்கு ஒரு திருமணம் செய்து வைக்க வேண்டும் என்பதாகும். ஏனெனில், அவருடைய மகளுக்கான திருமணத்தில் ஏனைய விடயங்களான சாதகப் பொருத்தம், சாதி சமூக ஒத்திசைவு, காசு, நகை போன்றன எல்லாம் ஒத்துப்போகின்றபோதும், அவரிடம் வீடு இல்லை என்பது அவருடைய மகளின் திருமணம் நிறைவேறாது போதற்கு முதன்மைக் காரணியாகி விட்டது. அவர் தன்னுடைய மகளுக்குச் சொந்தமாக வீடு வாங்கவேண்டும் என்றால் குறைந்தது இலங்கை ரூபாவில் 25 இலட்சமாவது வேண்டும். இது சாதாரணப் பகுதிகளில்தான். யாழ்குடா நகரங்களில் இதன் விலை சில வேளைகளில் இரு மடங்காக இருப்பது ஒன்றும் ஆச்சரியமில்லை.

ஏனெனில், போருக்குப் பின்னரான யாழ்ப்பாணச் சமூக, பொருளாதாரச் சூழலில் ஏற்பட்டு வரும் மாற்றம் யாழ்ப்பாண நகரத்தினை மையமாகக் கொண்ட வீட்டுக் காணிகளின் விலையிடலில் பெரியளவிலான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. 1998ஆம் ஆண்டு யாழ்ப்பாண நகரத்தில் ஒரு பரப்பு காணி வெறுமனே 3 இலட்சத்திற்கு விலைபோனது. ஆனால், இன்று அதே காணியின் மதிப்பு 50 இலட்சத்திற்கு மேல் மதிப்பிடப்படுகின்றது. இச்சூழலில் குறித்த தந்தையின் எதிர்பார்ப்பும் வீட்டின் உடைமைத் தன்மையும் கால மாற்றத்தில் வேறுபட்ட பரிமாணம் அடைந்துள்ளது.

இந்நிலையில் யாழ்ப்பாணச் சமூகத்தில் வீடு என்பது வெறுமனே கல், மண், கட்டிடப் பொருள்கள் இணைந்த ஒரு பொருண்மையில்லை. இவை சமூகப் பண்பாட்டு உணர்திறனுடன் இணைந்த ஒன்று.

அந்த வகையில் ஒருவர் தனக்கெனப் புதியதொரு வீட்டினைக் கட்டி, அதில் நிரந்தரமாக வாழ்வதற்கு முன்னர், அதனைச் சடங்கியல் ரீதியாகச் சமூகத்திற்கு வெளிப்படுத்துகின்றார். அதுவே 'புதுமனை புகுவிழா', 'வீடு குடிபுகுதல்' என்பதாகும். இதனுடைய சமூக-பண்பாட்டுச் சடங்கியல் பரிமாணத்தை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இச்சடங்கியல் நடைமுறையானது சமூகப் பன்மைத் தன்மை வாய்ந்தது. இந்த வகையில் யாழ்ப்பாணம் வடமராச்சிப் பிரதேசத்தில் வாழும் 'தச்சாசாரியார்' சமூகத்தினுடைய புது வீடு புகுதல் சடங்கினை மானிடவியல் நோக்கில் பகுப்பாய்வு செய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**3**

தமிழர் பண்பாட்டின் மரபார்ந்த நடைமுறைகள் இன்னும் காத்து நிற்கின்ற வடமராட்சியின் மையமான பருத்தித்துறை நகரத்திற்கு அண்மையில் உள்ள ஒரு சமூகப் பண்பாட்டுப் புலமாகவே மாதனைக் கிராமம் காணப்படுகின்றது. இந்தச் சமூகமானது தச்சாசாரியார் எனும் சமூக வகுப்பினரைக் கொண்டது. யாழ்ப்பாணச் சமூக அமைப்பானது சாதியக் கட்டமைப்பின் அடிப்படையைக் கொண்டதும் சாதிய-சமூகப் பண்பாட்டியல் கூறுகளின் வழியே நிலைபெற்றதுமான சமூக வரலாறாகப் பதிவுபெறுகின்றது.

எனினும், காலவோட்டத்தில் நிகழ்ந்த பல்வேறு புறக்காரணிகளது விசைகளின் விளைவாக யாழ்ப்பாணச் சமூகக் கட்டமைப்பிலும் பண்பாட்டிலும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இந்த மாற்றங்கள், குறித்த சமூகப் புலத்தின் இடவமைவு, அவர்களின் மீதான புறக் காரணிகளின் செல்வாக்கு, இந்தப் புறக் காரணிகளைக் குறித்த சமூகத்தினர் எதிர்கொண்ட விதம் எனப் பல்வேறுபட்ட விடயங்களினால் நிர்ணயமாகின்றது.

சடங்குகளும் அவை சார்ந்த செயற்பாடுகளும் வேறுபட்ட பண்பாட்டுப் புலங்களிடையில் ஒத்தனவாகவும் வேறுபட்டனவாகவும் காணப்படுகின்றன. சில வேளைகளில் குறிப்பிட்ட புலங்களில் சடங்குகள் தனித்துவமான கூறுகளின் அடிப்படையாக அமைகின்றன. இவ்வாறு ஒரு குறிப்பிட்ட பண்பாட்டுப் பகுதியில் வாழும் ஒரு சமூகத்தினுடைய தனித்துவமான சடங்கியல் கூறினை ஆராயும் ஓர் ஆர்வமே மாதனைப் புலத்திற்கு இட்டுச் சென்றது.

நகரச் சூழலோடு கிராமியச் சூழலும் இணைந்த ஒரு பண்பாட்டுப் பிரதேசமாகவே மாதனை காணப்படுகின்றது. இங்கு அண்ணளவாக 250 குடும்பங்கள் வாழ்கின்றன. இவர்களில் அதிகமானவர்கள் பாரம்பரியமாகத் தச்சுத் தொழிலையே மேற்கொள்கின்றவர்கள். இச்சமூகத்தினர் 'பஞ்சகம்மாளர்கள்' எனும் சமூக குலப் பிரிவில் ஒருவராக உள்ளடக்கப்படுகின்றனர். இவர்களின் தோற்றம் தொடர்பான ஐதீகமும் இவர்களின் வாழ்வியல் நடைமுறையில் ஒரு தனித்துவத்தினை ஏற்படுத்தியுள்ளது.

அந்த வகையில் ஸ்தபதி கணேசமூர்த்தியினுடைய *ஆயாதி சிற்ப ரகசியம்* எனும் நூலில் பஞ்ச கம்மாளர் என்போர் விஸ்வகர்மாவினால் இறை பணிக்காகப் படைக்கப்பட்டவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. விஸ்வகர்மா என்பவர் தேவலோகச் சிற்பி என விவரிக்கப்படுகின்றார். சில இடங்களில் பஞ்சகம்மாளர்கள் 'விஸ்வகர்மர்' குலத்தினர் என்றும் சுட்டப்படுகின்றார்கள். அதாவது, தச்சர் (மரவேலை செய்பவர்கள்); தட்டர் (பொன் வேலை செய்பவர்கள்), கொல்லர் (இரும்பு வேலை செய்பவர்கள்), கல் தச்சர் (சிற்ப வேலை செய்பவர்கள்), கன்னர் (செம்பு உலோக வேலை செய்பவர்கள்) எனும் அவர்களினுடைய கைவேலைப் பணியின் அடிப்படையில் சாதியக் கூறுகளாகப் பிரிந்துள்ளனர். எனினும், இவர்களிடையிலான மணவுறவு தொடர்ந்து பேணப்பட்டு வருகின்றது. இவர்களில் சிறப்புத் தகுதியடைந்தவர்களை 'ஆச்சாரியார்' என்று அழைக்கும் மரபு உள்ளது.

இவர்களுடைய வாழ்க்கை முறையானது ஏனைய சமூகங்களிலிருந்து வேறு

பட்டதாக உள்ளமை இங்குக் குறிப்பிடத் தக்கது. இவர்களின் வாழ்வியல் நடைமுறையின் தனித்துவமான பின்னணியிலேயே இவர்களுடைய அதிகமான சடங்குகள் காணப்பட்டாலும் இவ்வாய்வு குறிப்பாக 'புதுமனை புகுதல்' சடங்கினைப் பற்றிய ஒன்றாகவே அமைகின்றது.

4

எல்லாச் சமூகத்தினரிடையேயும் 'கல் வீடு' என்பது வாழ்க்கையின் சமூக மாற்றமாக மட்டுமன்றிச் சாதனையாகவும் பார்க்கப்படுகின்றது. அந்த வகையில் உலகப் பண்பாடுகள் அனைத்திலும் பழைய வீட்டிலிருந்து புதுவீட்டில் வாழப்போகும் பொழுது அதனைச் சடங்கின் வழியே மேற்கொள்ளுதல் ஒரு மரபாகியுள்ளது. ஏனைய சமூகங்களில் இச்சடங்கானது சமூகம் சார்ந்த சடங்காக உள்ளபோதும் தமிழர்களிடையேயும் ஏனைய சில சமூகத்தவர்களிடையேயும் இச்சடங்குகள் சமயம் சார்ந்த நடைமுறைகளுடன் மிக இணைந்த நிலையில் மேற்கொள்ளப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. தென்னிந்தியக் கிராமங்களில் இச்சடங்கு 'தச்சுக் கழித்தல்' சடங்கு என்று சொல்லப்படுகிறது.

முதன்முதலாகக் குடியேறுவதற்கு முன்னதாகப் புதிதாகக் கட்டப்பட்ட வீடு ஒன்றுக்குச் செய்யப்படும் சடங்கு தச்சுக் கழித்தல் எனப்படும். இது அவ்வீட்டின் நிலை, கதவு, சன்னல், சுவர்கள், நிலைப்படிகள் ஆகிய அனைத்திற்கும் செய்யப்படும் சடங்காகும்.

இது தொடர்பாகப் பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிடும் போது மரம், கல், மணல், மண், இரும்பு ஆகியன காடு சார்ந்த களங்களிலிருந்து பெறப்பட்டனவாகும். மனிதரில்லாத பிற இயலிறந்த ஆற்றல்கள் இவற்றில் உறைந்திருக்கலாம்; மேலும், இவை காட்டுக் களத்தைக் குறியீடு செய்கின்றன; இப்பொருட்கள் நாட்டுக் களத்தில் 'வீடு' என்ற அமைப்பாக உருவாகின்றபோதும் அவ்வீட்டைக் காட்டுத் தன்மை உடையதாக ஆக்குகின்றன; எனவே, சமூகக் களத்தில் இடம்பெறும் வீடு மனிதர் வாழக் கூடியதாக நாட்டுத் தன்மை பெறச்செய்தல் அவசியமானதாகும்.

காடுசார் தன்மைகளை அப்பொருளிலிருந்து நீக்கி அவற்றை நாட்டுத் தன்மை பெறச் செய்வதாகவும் 'வீடு' என்பதனை நாட்டுக் களமாகவும் மாற்றம் செய்யும் சடங்காகவே தச்சுக் கழித்தல் சடங்கு அமைந்திருக்கின்றது. மேலும், காட்டுக் களத்தில் உறைந்திருக்கக்கூடிய தீய ஆவிகள், பேய்கள் என்பவற்றைப் புதிதாகக் கட்டப்பட்ட வீட்டிலிருந்து நீக்கி அதனை நாட்டுக் களத்தைச் சேர்ந்த மனிதர்கள் வாழ்வதற்கு ஏற்ற வகையில் உருவாக்கும் சடங்காகவும் இதனைக் காணலாம். இது பற்றி பிலவேந்திரன் அவர்கள் குறிப்பிடும் போது, தச்சுக் கழித்தல் சடங்கின் வழியே புதுவீட்டிற்கு 'உயிர்ப்பூட்டுதல்' செய்யப்படுகின்றது என்பார்.

இவ்வகையான தச்சுக் கழித்தல் சடங்கினை யாழ்ப்பாணத்தில் 'தச்சன் பொங்கல்' என்று குறிப்பிடுவார்கள். இதனை யாழ்ப்பாணத்தில் வசிக்கக்கூடிய தச்சர் அல்லாத சாதியக் குழுமத்தினர் மேற்கொள்கின்றனர். இங்கு தச்சன் காளிக்குப் பொங்கலிட்டு, அப்பொங்கலையும் பொங்கல் செய்த புதுப் பானையையும் தச்சனுக்கே கொடுத்துவிடுதல் மரபாகும். இதனைத் தொடர்ந்தே ஏனைய சடங்குகள் செய்யப்படும்.

5

வீடு கட்டுதல் என்பது ஒரு பெரிய சமூகம்சார் விடயமாகவுள்ளது. இங்கு வீட்டுக்கு நிலம் எடுப்பதிலிருந்து வீட்டுக்குக் குடிபுகுதல் வரையாகப் பல்வேறு சடங்கு நடைமுறைகள் காணப்படுகின்றன. ஏனைய சமூகத்தினர் போல் அல்லாது தச்சாசாரியார் சமூகத்தினர் மத்தியில் வீடு குடிபுகுதல் என்பது தனித்துவமான சடங்கியல் நடைமுறைகள் கொண்டதாகக் காணப்படுகின்றது. இதனை மானிடவியல் நோக்கில் பகுப்பாய்வு செய்யும்போது சமூகம் சார்ந்த புதிய அர்த்தங்களைப் பெற முடியும். தச்சாசாரியார்களுடைய வீடுகுடி புகுதல் சடங்கில் மூன்று பிரதான கூறுகள் முதன்மை பெறுகின்றன.

வீடு குடிபுதலுக்கு முதல் நாள் புதிய தாகக் கட்டப்பட்ட வீட்டினுள் பசு வினைக் கட்டுதல். இது முதலில் இடம் பெறும் சடங்காகும். அதாவது, தாங்கள் வாழ்வதற்கு முன்னர் தெய்வாம்சம் பொருந் திய பசுவினை அவ்வீட்டினுள் ஓர் இரவு தங்க விடுதலின் மூலம் வீட்டினுள் உறைந் திருக்கும் தீய ஆவிகள், பேய்கள் வெளியேற் றப்பட்டுவிடும் என்று மக்கள் நம்புகிறார் கள்.

இந்த வகையில்தான் சடங்கு நிகழ்வுக்கு முதல் நாள் வீட்டின் உரிமையாளர் பசு மாட்டினை வீட்டினுள் கட்டிவிடுவார். அன்று ஓர் இரவு முழுவதும் குறித்த பசு வினுடைய வாழ்விடமாக புதியதாகக் கட்டப்பட்ட வீடு இருக்கும். அதிகாலை யில் அப்பசுவினை வீடுகுடிபுகுதல் சடங்கு செய்யும் ஆசாரியாருக்குத் தானமாகக் கொடுத்தல்வேண்டும் என்பது மரபு. இத னால்தானோ என்னவோ இப்பகுதியில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் பசு இருப்ப தினைக் களஅவதானத்தின்போது அறிய முடிந்தது. இச்சடங்கு செய்யும் ஆசாரியார் என்பவர் ஏனைய சமூகத்தினரைப் போன்று பிராமணராக இல்லாது தச்சா சாரியார் சாதியக் குலமரபில் வந்த ஒருவ ராகவே இருக்கின்றமை இங்குக் குறிப்பிடத் தக்கது. ஆனாலும், வீட்டின் உரிமையாளர் சடங்கு செய்யும் ஆசாரியாராக இருத்தல் கூடாது என்பது இம்மக்கள் மனங்களில் எழுதப்படாத நியமமாகவுள்ளது.

அடுத்த சடங்கு நிகழ்வாக காளிக்குப் படைத்தலும் பால் காய்ச்சுதலும் முதன்மை பெறுகின்றன. சடங்கு நிகழ்வன்று நடுவீட் டில் கட்டப்பட்டிருந்த பசுவினால் போடப் பட்ட சாணத்தினை அகற்றி வீட்டினைக் கழுவிச் சுத்தம் செய்வார்கள். இதன் பின்னர் நிறைகும்பம் வைத்து புதுப்பானையில் பொங்கல் பொங்கித் தங்கள் குலதெய்வ மான காளிக்குப் படைப்பார்கள். இங்கு குறிப்பாக, வீட்டுக்கு அருகில் உள்ள முச் சந்தியில் நீற்றுப்பூசணிக்காய் (வெள்ளைப் பூசணி) வெட்டி, குங்குமம் தடவிக் கழிப்புக் கழித்தல் முதன்மையானது. அதாவது, காட்டுக் களத்தில் உறையும் தீய ஆவிகளை வீட்டிலிருந்து வெளியேற்றி அவர்களை எல்லைக்குக் கொண்டுபோய் விட்டு, அவை மீண்டும் வராமல் இருப்பதற்குக் காளிக்குப் பலியிட்டுக் காவல் செய்வ தாக இது அமைகின்றது. இது பேரா. சிவசுப்பிர மணியம் அவர்கள் குறிப்பிடுவது போன்று வீட்டினை நாட்டுக் களத்திற்குரியதாக மாற்றும் ஒரு நிலை மாற்றுச் சடங்கு ஆகும்.

காளிக்குப் படையல் இட்டு, கழிப்புக் கழித்த பின்னர் வீட்டினுள் பால் காய்ச்சும் சடங்கு நடைபெறும். இது வீட்டினுள் அடுப்பினை வைத்துப் புதுப்பானையில் பசும்பாலினைக் காய்ச்சுதலாகும். இதனைக் குறிப்பாக வீட்டு உரிமையாளர் மனைவியே செய்வார். பின்னர் காய்ச்சப்பட்ட பாலை வீட்டினுடைய சாமியறையில் (தாயறை/ பெரியஅறை/படஅறை) உள்ள தெய்வத் திற்குப் படைப்பார்கள். இதனை பிலவேந் திரன் குறிப்பிடுவது போன்று வீட்டுக்கு உயிர்ப்பூட்டும் சடங்கு எனலாம். ஏனெ னில், இதுவரை குறித்த வீட்டில் தீய ஆவி கள் இருந்தன. வீட்டிலிருந்து அவற்றை வெளியேற்றி அதற்கு ஆத்மாவினை ஊட் டும் சடங்கியல் நடைமுறையாகப் பால் காய்ச்சிப் படைத்தல் அமைகின்றது.

அண்மைக் காலத்தில் ஏற்பட்டுவரும் சமூக மாற்றங்களிடையே இச்சடங்கானது பெரிய விழாவாகக் கொண்டாடப்படுகின் றது. ஒரு வகையில் ஒருவரது சமூக நிலை மாற்றத்தை அவரைச் சூழவுள்ள உறவின ருக்கும் சுற்றத்தாருக்கும் வெளிப்படுத்தும் ஒன்றாகவும் இதனை நோக்கமுடியும். பொதுவாகப் புதுப்பானையில் காய்ச்சப் பட்ட பாலினை வீடு குடிபுகுதலுக்கு வந்த அனைவருக்கும் கொடுத்தல் இடம்பெறும். அண்மைக் காலத்தில் சிற்றுண்டி, காலை, மதிய உணவுகள் வழங்கும் நடைமுறைகள் காணப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட சடங்குகளை அடுத்து இடம்பெறுவது வீட்டினை வீட்டு உரிமையாளருக்குக் கையளிக்கும் சடங்காகும். இச்சடங்கு அதிகமாக தச்சா சாரியார் சமூகத்தினர் மத்தியில் இன்றும் பின்பற்றப்பட்டு வரும் ஒன்று. இங்கு தச்சா சாரியார் ஒருவர் வீட்டின் திறப்பினை

(சாவியினை) வீட்டு உரிமையாளரின் உறவினர் ஒருவரிடம் கொடுப்பார். இவ் உறவினர், வீட்டு உரிமையாளருக்கு இரத்த வழி நெருங்கிய உறவினர்களில் ஒருவ ராகவே இருப்பார். அவரிடம் இருந்து வீட்டு உரிமையாளர் காசு கொடுத்து குறித்த வீட்டினுடைய சாவியினை வாங்கு வார். காசுகொடுத்தல் என்பது ஒரு குறியீ டாக இடம்பெறும். இதனை 'வீட்டினை வித்துவாங்குதல்' என்பர். வீட்டினை வித்துவாங்குதல் சடங்கானது வீட்டின் உரிமையாளர் தற்பெருமை கொள்ளா திருப்பதற்குரிய ஒரு வழிமுறையாக மேற் கொள்ளப்படுகின்றது என்பது இச்சமூகத் தினரது எண்ணப்பாடாகும். இச்சடங்கு களில் பெண்களைவிட ஆண்களே அதிக முக்கியத்துவம் பெறுகின்றனர்.

### 6

சடங்கியல் பகுப்பாய்வின் வழியே நோக்கும்போது பசுவும் அதனுடன் இணைந்த புனிதமும் ஏனைய சமூகத்தி னரைவிட இங்கு அதிகம் முதன்மை பெறுகின்றன. பசு தொடர்பான சடங்கியல் நடைமுறை ஏனைய சமூகங்களில் ஆரம்ப காலத்தில் நிலவிவந்துள்ளபோதும் கால வோட்டத்தில் பசுவினுடைய முக்கியத் துவம் அச்சமூகங்களில் குறியீட்டு அம்ச மாக மாற்றமடைந்துள்ளது. எனினும், இங்கு இது முழுமையாகப் பேணப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஏனைய புலங்களில் வாழும் ஆசாரியார் சமூகத் தினர் மத்தியில்கூட அயல் சமூகத்தின் இடைவினையால் மாற்றமடைந்து சிறு குறியீடாகக் காணப்படுகின்றமையும் இங்குக் கவனிக்கத்தக்கது. அதாவது, பசுவினுடைய சாணத்தினைப் பயன்படுத்த லுடன் இது தொடர்கின்றது.

மாதனைக் கிராமச் சமூகத்தில் வாழும் ஆசாரியார்களிடம் இம்மாற்றங்கள் பற்றிக் கலந்துரையாடியபோது அவர்கள் இம் மாற்றங்களை ஒருபோதும் தங்களுடைய பிரதேசத்தில் ஏற்படுவதற்கு அனுமதிக்கப் போவதில்லை என்றும், இச்சடங்குகளின் வழியாகவேனும் தங்களுடைய பண்பாட் டுத் தனித்துவத்தினையும் சமூக அடையா ளத்தினையும் எதிர்காலத்தில் நிலைநாட்ட வேண்டும் என்ற மனப்பாங்குடன் இருப்ப தினையும் காணமுடிகின்றது.

மானிடவியல் நோக்கில் இச்சடங் கினை நோக்கும்போது இதனை ஒரு சமூகம் சார்ந்த தகுதி மாற்றச் சடங்காக நோக்கமுடியும். இங்கு தகுதி மாற்றத்தினை இரண்டு அடிப்படைகளில் நோக்க முடியும். அதாவது, ஒன்று வாழ்வியல் மாற்றம்; மற்றொன்று சமூக அந்தஸ்து மாற்றம். இதனை மானிடவியலாளரான ரோனால் கிம்ஸ் என்பவரின் நிலைமாற்றச் சடங்கியல் சிந்தனையினடியாக நோக்க முடியும்.

பல சந்தர்ப்பங்களில் நிலைமாற்றச் சடங்கு என்பது சமூக அந்தஸ்து மாற்றத் தினைச் சுட்டினாலும், யாழ்ப்பாணச் சமூகத்தினைப் பொறுத்தவரையில் சமஸ் கிருதமயமாக்கம், மேலைமயமாக்கம் மூலமாக மரபார்ந்த சமூகங்கள் நவீன சமூக அமைப்பாக மாறுவது அவதானிக்கப் பட்டுள்ளது. எனினும், அவர்களுடைய சமூக அந்தஸ்து மாற்றம் வெறுமனே சமஸ்கிருதமயமாக்கல் வழியான சடங்கு நிலைமாற்றத்துடன் மட்டும் அடையப் பெறுவதில்லை என்பது பேராசியர் சண்முகலிங்கன் அவர்களுடைய ஆய்வில் வெளிப்பட்ட உண்மையாகும். இந்த உண்மையின் யதார்த்தத்தினை இவ்வாய்வு வெளிப்படுத்தியுள்ளது.

தச்சாசாரியார் சமூகத்தில் சமஸ்கிருத மயமாக்கல் செல்வாக்குக் குறைந்துள்ள போதும் அவர்களுடைய சமூக அந்தஸ்து சார்ந்த மாற்றத்தில் வீடுகுடிபுகுதல் சடங்கு ஒரு பக்கச் சார்பான தன்மையினையே கொண்டுள்ளது. அதாவது, இச்சடங்கில் இரண்டு கூறுகள் முதன்மை பெறுகின்றன. ஒன்று புதிய வீட்டை ஒருவர் தன்னுடைய உடைமைப் பொருளாக்குகின்ற செயல் பாட்டினைத் தான் சார்ந்த சமூகத்தினருக்கு வெளிப்படுத்துகின்றார். இவ்வெளிப்பா டானது அவருடைய சமூக அந்தஸ்து நிலையில் குறித்த சமூகச் சூழலுடன் மட்டும் மட்டுப்படுத்தப்படுகின்றது. அதேநேரம், ஏனைய சமூகத்தவர்கள்

போன்று பிராமணியச் சடங்கியல் செல்வாக்கிற்கு உட்படாத வகையில் இதனை மேற்கொள்வதன்வழியே தங்களுடைய சமூகத் தனித்துவத்தினை வெளிப்படுத்துகின்றார்கள்.

இதன் பின்புலமாக இவர்களுடைய தோற்றம் தொடர்பான ஐதீகம் மிகவும் செல்வாக்குச் செலுத்துகின்றது. அதாவது, தேவலோகச் சிற்பியான விஸ்வ கர்மாவினால் அவர்கள் படைக்கப்பட்டது, அதுவும் தெய்வ கைங்கரியங்களான கோயில் கட்டுதல், கோயில் விழாக்களுக்குத் தேவையான தேர் செய்தல், தெய்வங்களுக்கான ஆபரணங்கள் செய்தல் போன்ற கடமைகளுக்கு உரித்தாக்கப்பட்டவர்கள்; அவர்கள் தங்களைப் பிராமணர்களுடைய சமூக அந்தஸ்து நிலைக்குச் சமாந்திரப் படுத்திக் கொள்வதற்கு எடுத்துக்காட்டாக இச்சடங்கில் பிராணர்களின் சடங்கியல் செயற்பாட்டினைத் தவிர்த்துள்ளமை வெளிப்படுகின்றது. ஏனெனில், இன்று பிராமணர்களின் வீடுகளில் இடம்பெறும் சடங்கியல் நடைமுறைகளை பிராமணர்களே செய்து வருவதினைப் போன்று தங்களுடைய சடங்கியல் நிகழ்வுகளிலும் தங்கள் சமூகத்தவர்களே செய்வதன் மூலமாகத் தங்களுடைய சமூக அந்தஸ்து வெளிப்பாட்டினை உணர்த்துகின்றனர்.

இவ்வாறாக நியமமான அவதானங்கள் ஏனைய சமூகப் புலங்களில் செய்கின்ற போது அச்சமூகக் கட்டமைப்பையும் அதனுடைய சமூக மாற்றம் தொடர்பான இயங்கியல் விசைகள் பற்றிய முழுமையான அறிவினையும் பெறமுடியும். மாறிவரும் இன்றைய உலகச் சூழலில் சமூக அடையாளங்களாகக் காணப்படும் இச்சடங்குகள் பற்றிய ஆய்வுகள் அவசியமானதே.

### துணை நூல்கள்

1. கணேசமூர்த்தி, .பி., 1978, *ஆயாதி சிற்ப ரகசியம்*, சென்னை, மாமல்லபுரம் தொழில்நுட்பக் கல்வி இயக்கம்.
2. பக்தவத்சல பாரதி, 2002, *தமிழர் மானிடவியல்*, சிதம்பரம், மொய்யப்பன் பதிப்பகம்.
3. பிலவேந்திரன், ச., 2005, 'சகுனமாகும் குறிக்கீடுகள்: ஒரு கட்டவிழ்ப்பு முயற்சி', சி.மா. இரவிச்சந்திரன் மற்றும் தே. ஞான சேகரன் (பதிப்), *தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வுகள்*, பக். 107-133, கோயம்புத்தூர், தமிழ்த் துறை, பாரதியார் பல்கலைக்கழகம்.

சண்முகராஜா சிறிகாந்தன், முனைவர் பட்ட ஆய்வாளர், புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி; விரிவுரையாளர், சமூகவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
கைபேசி 8124536773
மின்னஞ்சல் srikanthan80@gmail.com